# உளவியல் நோக்கில் மாறன் அகப்பொருள்

**மா. சங்கீதா**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழாய்வுத்துறை, தூயவளனார் தன்னாட்சிக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

உள்ளத்தின் கோலங்களையும் கோணங்களையும் ஆராய்கிற ஓர் அறிவியல் அணுகுமுறையே உளவியல் ஆகும். மனிதனின் நடத்தையை நிர்ணயிப்பதும், அவன் மனதில் புதைந்து கிடப்பனவற்றைப் புரிந்து கொள்வதுமே உளவியல் பகுப்பாய்வு ஆகும். இலக்கிய இலக்கண நூல்கள் மனித வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. ஒவ்வொரு படைப்பாளர்களின் படைப்புகளும் அவர்களுடைய அனுபவங்களின் வெளிப்பாடாகும். இலக்கியங்களின் சாரமாகக் கருதப்படுவது இலக்கணம். மனித வாழ்க்கையைப் பற்றிப்பேசுவது பொருளிலக்கணம். அவை அகப்பொருள், புறப்பொருள் என தோன்றியுள்ளன. அதில் ஒன்று 'மாறன் அகப்பொருள்' ஆகும். இதனை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் ஆவார்.

உளவியலாளர்களின் உணர்ச்சிகளையும் மாறனகப்பொருளில் காணலாகும் அக உணர்வுகளையும் ஒப்பிட்டு ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

## மாறனகப்பொருளில் இயல்பகுப்புமுறை

மாறனகப்பொருளின் காலம் கொல்லம் 723, அது கி.பி. 1548 என்கின்றனர். இதில் இடம் பெறும் இயல்களை,

**ஐந்திணைச்சேர் மாறன் அகப்பொருளிற் சேருமியல்**
**ஐந்தாம்நூற் பாவெண் அடைவாகப் - பைந்தொடியே!**
**முந்நூற்று அறுபத்து மூன்றாம் முதல் இறுதி**
**உந்துவட ஓர் கடனே ஓர் (தமிழிலக்கண வரலாறு ப.351)**

வெண்பா வாயிலாக அறியமுடிகிறது. இதில் அகத்திணையியல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல் ஆகிய ஐந்து இயல்களில் 363 நூற்பாக்கள் இடம் பெறுகின்றன.

## மனிதனின் அடிப்படைத் தேவைகள்

ஒவ்வொரு மனிதனும் தன், இயல்பான தேவைகளின் அடிப்படையில் முன்னேறுகிறான். மனிதனின் தேவைகள் ஆறு படி நிலைகளைக் கொண்டது என்கிறார். மாஸ்லோ, அவை

**உடல்சார் தேவைகள்**
**காப்புத் தேவைகள்**
**அன்புத் தேவை**
**தன்மதிப்புத் தேவைகள்**
**நன்மதிப்புத் தேவைகள்**
**மேனிலையாக்கம் (இலக்கியமும் பிறதுறைகளும்,ப.893)**

இதில் உடல்சார்தேவைகள் உணவு, உடை, இருப்பிடம் ஆகும். இவை பூர்த்தியான பின்பு மனம் காப்புத் தேவையை நாடுகிறது. காப்புணர்வு, நலம், அமைதி, போன்றவை நிறைவேறிய பின் அடுத்த தேவையின் மீது கவனம் செல்கிறது. நல்ல பாதுகாப்பு கிடைத்த பிறகு அன்புத் தேவை உருவாகிறது. தன்னிடம் பிறர் அன்பு செலுத்துவதையும், தன் அன்பைப் பிறர் ஏற்பதையும் மனம் விரும்புகிறது.

**உணர்ச்சிகளின் தோற்றம்**

உணர்ச்சிகளின் தோற்றத்தை அறிவியலாளர்கள் கவனமாக ஆராய்ந்துள்ளனர். உணர்ச்சி என்பது, வழக்கமான புலன் செயல்பாடுகளின் ஊடே நிகழும் ஒருவிதத்தடை அல்லது அவற்றினிடையே நிகழும் தற்காலிக மாற்றமே உணர்ச்சி என்கின்றனர். அப்போது தனிச்சையாக (Automatic) நனவு மனத்தின் கட்டுப்பாட்டினைத் தாண்டி, உடம்பில் ஒருவிதமாக உந்துதல் சக்தி தொடர்ந்து நிற்கின்ற நிலையும் ஏற்படுவதுண்டு அப்போது மன அழுத்தம் (Stress) போன்ற தீவிர மனநிலை ஏற்படுகிறது.

எந்தவித உணர்ச்சியும் காலத்தைத் தாண்டும் போதும், ஆழ அகல பரிமாணங்களைத் தாண்டும் போதும், மனநிலை மாற்றங்களை ஏற்படுத்துவது உடலியலைப் பொறுத்தவரை தவிர்க்க இயலாததாகும். இப்படிப்பட்ட மனநிலை ஏற்படும் போது உடலில் வேறுபாடுகள் தோன்றுகின்றன. “இதயம் வேகமாகத் துடிக்கிறது, அதிக புரதங்கள் சுரக்கின்றன. அதனால் சர்க்கரையை வெளிப்படுத்த ஈரலுக்குத் தூண்டல் தேவைப்படுகின்றது. மற்ற உறுப்புகளின் இறுக்கத்தை ஏற்படுத்துகின்றன. உமிழ்நீர் சுரப்பி ஓரளவிற்கு மட்டுப்படுத்தப்படுகின்றது. அதனால் வியர்வை பெருகுகிறது. தோல்பகுதி சுருங்குகிறது இவையெல்லாம் உணர்ச்சி நிலை அளவு கடந்தால் ஏற்படும் நிகழ்வுகளாகும்.

மாறன் அகப்பொருளில் தலைவன் தலைவி சந்திக்கும் போது, சில மாற்றங்கள் ஏற்படுகின்றன. களவியலில் கைக்கிளை பாகுபாட்டில் முதல் காட்சி

> **நிலம் வேறுஒன்று எனும்நிலைமையர் ஆகி**
> **குலநலன் திருவுரு குறிக்கொளின் ஒன்றாம்**
> **இறைவனும் இறைவியும் இருமையும் தொடர்ந்த**
> **முறைபயில் பான்மை மூதுடை முதல்வன்**
> **ஏவலின் கண்ணுறும் இயற்கைக் காட்சி**
> **காவலன் உயரினும் கடிநிலை இலவே (மாறன்களவியல் - 30)**

குலம், செல்வம், அழகு, பண்புநலன் ஆகியவற்றால் ஒத்த தலைவனும், தலைவியும், வேறொரு காரணம் பற்றிப் பிறவிதோறும் தொடர்ந்து வந்து ஒருவரை ஒருவர் காண்பது இயற்கைக்காட்சி நிகழ்கின்றன. அப்போது சில மாறுதல் ஏற்படுகின்றன.

**மாறனகப்பொருளில் மெய்ப்பாடுகள்**

மாறனகப்பொருளில் நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம், பெருமிதம், வெகுளி, உவகை ஆகிய எட்டு மெய்ப்பாடுகளையும் முப்பத்திரண்டு ஆக விரித்துரைக்கிறார். அவை உடைமை முதலாகக் கலக்கம் என்பதை இறுதியாக நிகழும் காட்சியாகும் என்கிறார். அகத்திற்குரிய மெய்ப்பாடுகள் புணர்ச்சிக்கு முன் நிகழ்பவை, புணர்ச்சிக்குப் பின் நிகழ்பவை, களவுக்காலத்திலும், சில கற்புக் காலத்திலும் மேலும் வரைதல் வேட்கைக்குரிய மெய்ப்பாடுகளையும், வரைந்தெய்திய பின் தலைவியின் மனத்துக்கண் நிகழும் மெய்ப்பாடுகளையும் எடுத்துரைக்கிறார்.

> **உளத்துறும் இன்பம் ஆங்குரவோர்**
> **வளர்த்த செய்யுளின் வகுத்தசொற் பொருளினும்**
> **மெய்யினும் வெளிப்படல் மெய்ப்பாடாகும் (மாறனகப் பொருள் - 278)**

மனதில் ஏற்படும் இன்ப துன்பங்கள் மெய்யில் வெளிப்படையாகத் தோன்றுவது மெய்ப்பாடு என்கிறார்.

**உணர்ச்சிகளின் மூன்று படிநிலைகள்**

உளவியலாளர்கள் உணர்ச்சியை மூன்று படிநிலைகளில் விளக்க முயற்சித்துள்ளனர்.

1. உணர்ச்சியை எவை உந்துவிக்கின்றன? அல்லது எழுப்புகின்றன?

2. எழுப்பிய பின் மனமும் உடலும் எவ்வாறு அவற்றோடு தொடர்பு கொண்டு இயங்குகின்றன?
3. உணர்ச்சியை நாம் அனுபவிக்கும்போது உடலும் உள்ளமும் எவ்வாறு ‘விளைவு அறிவிப்பு செய்கின்றன?’ என்ற வினாவை எழுப்புகின்றன. மேலும் இவ்வுணர்ச்சிகளை மூன்று நிலைகளாகப் பகுக்கின்றன. அவை அக உணர்ச்சி, சின உணர்ச்சி, அழுகை உணர்ச்சி ஆகியவையாகும்.

**இலக்கணத்தில் அகஉணர்வுகள்**

உணர்ச்சி என்பது எதுவென்று விளக்க (Definition) விஞ்ஞானத்தாலும் முடியவில்லை. இதனைத் தொல்காப்பியர்

**நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு**
**ஆவயின் வரும் கிளவி எல்லாம்**
**நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது**
**காட்டலாகாப் பொருள் என்ப (தொல். பொருள் - 51)**

இதனை ஐம்பொறிகளின் வாயிலாக அறியுமாறு விளக்குகிறார். இதனைத் திருக்குருகைப் பெருமாள் கவிராயர், குறிப்பறிதல் இலக்கணத்தில் உணர்த்துகிறார்.

**கண்ணினை புகுமுகம் புரிதலிற் காரிகை**
**உள்நிகழ்வேட்கை உரவோர்க்கு உணர்த்தும் (மாறன்களவியல் - 40)**

தலைமகளின் கண்களிரண்டும் எதிர் நோக்கம் செய்தலான் அவளது உள்ளத்து வேட்கையைத் தலைவன் உணர்வான். ஆதலின் அவன்தன் தண்ணிய நோக்கம் அவன்பால் அவளுற்ற வேட்கையை உணர்த்துகின்றன.

தொல்காப்பியர் இதனை வேட்கை முதலாக சாக்காடு ஈறாக பத்து அவத்தைகளில் உணர்த்துகிறார். அவை,

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றிச்**
**சிறப்புடை மரபினவை களவென மொழிய (தொல்- பொருள் - 97)**

காட்சி, வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கம் செப்புதல், நாணுவரை இறத்தல், நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு போன்ற உணர்வுகள் ஏற்படும் என்கிறார். செலவழுங்கல் துறைகளில் தலைவிக்கு ஏற்படும் மாறுதல்களை உணர்த்துகிறார்.

**தலைவன் செலவழுங்கல்**

**ஐவகை பிரிவினும் அழுங்கற்கும் உரியன**
**மனைவயின் அழுங்கலும் வன்சுரத்திடைச் சென்று**
**அழுங்கலும் முரிய னாகும் மென்ப**
**அம்மனை இவளொடும் தன்மன மாயிடை**
**விம்முறல் ஒழிக்கும் விதி தனக் கழுங்கினும்**
**செம்மலர் செலவினை தீரானாங்கே (தமிழ் இலக்கணநூல்கள், 315-317)**

தலைவன் செலவழுங்களுக்குரிய இடம், தலைவி செலவழுங்களுக்குரிய இடம், மாறனகப்பொருளில் பாசறைப் புலம்பலில் தலைவனின் நிலையைப் பதிவுசெய்கிறார்.

**மனைவி தன்னிலை வினைவயின் இளையார்**
**சேயங்கொள் காலையில் செப்புவதாகும் (த.இ.நூல்கள்-318)**

இத்தகைய செலவழுங்கல் துறை, தலைவன் தலைவியை விட்டு பிரிந்து செல்லும்போது ஏற்படுகின்றன. இதனைத் தொல்காப்பியர்,

**நோய்மிகப் பெருகித் தன்னெஞ்சு கலுழ்ந்தோயே**

என்கிறார். மேலும் செலவமுங்களில் இச்செயல்கள் நடந்த உடனே, உடம்பில் நடைபெறும் நிகழ்வுகள் நனவு மனத்தில் பதியப்படுகின்றன. மூளையின் செயல்பாடுகள் ஆளுக்கு ஏற்றவாறும், வயதுக்கு ஏற்றவாறும் மாறக்கூடியது. அழுகை உணர்ச்சியைத் துன்ப உணர்வானது வெளிப்படுத்துகிறது. பழைய அனுபவங்களின் நினைவும், புதிதாக களம் கண்டது போல செயல்படுவதுண்டு. பழைய நினைவுகளும், புதிய உணர்வுகள் போலத்தோன்றுவதுடன், அவை புதிய சூழ்நிலையைத் தூண்டுகிறது என்பதை உணர்த்தும் பாடல்,

**அற்றைத் திங்கள் அவ்வெண் ணிலவின்**
**எந்தையும் உடையேம் எம்குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண் ணிலவின்**
**வென்றெறி முரசின் வேந்த ரெம்**
**குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே** **(புறம்.112)**

தந்தை பாரியை இழந்த மகளிரின் புலம்பல் துன்பதை வெளிப்படுத்துகிறது.

சின உணர்ச்சி என்பது என்றோ நடந்த வாக்குவாதத்தின் நினைப்பு இன்று மனதில் தோன்றி ஏற்படுத்தும் தூண்டலால் சினம் வெளிப்படுகின்றன.

**வரிவயம் பொருத சினக்களிறு போல**
**இன்றும் மாறாதது சினனே** **(புறம்.190)**

ஒருவரைப் பார்த்தவுடன் காரணமில்லாமல் சினம் கொள்கிறோம். இதற்கு மூளையில் பதிவாகியுள்ள எண்ணப் பதிவுகளே காரணம் என்பதை உளவியளாளர்கள் உணர்த்துகின்றனர்.

**நிறைவாக**

பொருளிலக்கணத்தில் ஒரு பகுதியாக விளங்குகின்ற அகப்பொருளில் தொல்காப்பியர் எட்டு மெய்ப்பாடுகளை முப்பத்திரண்டாக விரித்துக் கூறுகிறார். மாறனகப்பொருளிலும் அதே 32 மெய்ப்பாட்டுணர்வுகள் வெளிப்படுகின்றன. உளவியலாளர்கள் உணர்ச்சியை மூன்றாகப் பகுக்கின்றனர். அவை அகஉணர்ச்சி, அழுகை உணர்ச்சி, சின உணர்ச்சி ஆகும். அக உணர்ச்சி அகப்பொருளில் மட்டும் இடம் பெறுகிறது. அழுகை அகம், புறம் இரண்டு நிலைகளிலும் வெளிப்படுகின்றன. சினம் புறநூல்களில் அதிகம் இடம் பெறுகின்றன என்பது இக்கட்டுரையின் வழி ஆராயப்பெற்றுள்ளன.

**துணை நின்ற நூல்கள்**


1. சண்முகம் தா.ஏ, உளவியல், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
2. மாரப்பன். எம் தொல்காப்பியரின் உளவியல் கோட்பாடுகள், தி பார்க்கர் பதிப்பகம், சென்னை.
3. இளங்குமரனார் இரா., தமிழ் இலக்கண வரலாறு, மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
4. கண்ணன். இரா, மாறனகப்பொருள் - களவியல், கூத்தன் பதிப்பகம், சென்னை.